16 ஜூன் 2024
பொதுக்காலம் ஆண்டின் 11 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH
newbec+

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக நம் குழந்தைகளை வளரவிடுங்கள்

# அமைதியான வளர்ச்சி

“வளர்ச்சி அமைதியானது மற்றும் இரகசியமானது” என்று ஒரு பழமொழி உள்ளது. இன்றைய நற்செய்தியில் வயலில் விதை விதைப்போரையும் கடவுளின் அரசையும் ஒப்பிட்டுப் பேசுகிறார். விதைகள் முளைத்து, இரகசியமாகவும், அமைதியாகவும் வளர்கின்றன. அவை எவ்வாறு முளைத்தது என்று விதைப்பவனுக்குத் தெரியாது. வாழ்க்கையிலும் நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் பல நேரங்களில் எவ்வாறு நிகழ்கின்றன என்பதற்கு இது சாட்சியமளிக்கிறது. - சில சமயங்களில் மிகவும் மெதுவாக நிகழும்போது அவை நம்மை விரக்திக்கும் கிளர்ந்தெழுவதற்கும் இட்டுச் செல்லக்கூடும்.



அதிலும் குறிப்பாக இன்றைய ‘உடனடி’ வாழ்க்கையில் அது இன்னும் அதிகமாகும். இன்றைய உலகில் அனைத்தும் நம் விரல்நுனியில் உள்ளது. மற்றும் நம்மைச் சுற்றி மெதுவாக நகரும் செயல்பாடுகளின் உண்மை நிலை, நம்பிக்கை தொடர்பானவற்றைக் கூட ஏற்றுக்கொள்ள கடினமாக இருக்கலாம். விரைவான தீர்வுகள் மற்றும் உடனடி பதில்கள் மற்றும் நம்பிக்கைத் தொடர்பான ஒவ்வொரு கேள்விக்கும் பதில் தேவை என்று நாம் விரும்புகிறோம்.

நாம் யாராக மாறவேண்டும் என்றும் அல்லது உலகமுக்கியத்துவம் வாய்ந்த நபரைப் போல மாறலாம் என்றும் உலகம் பரிந்துரைக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறான புகழையும் விளம்பரத்தையும் நாம் தேடவேண்டிய தேவையில்லை. புனித பவுலடிகளார் கூறுவதைப் போல “நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல; நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம். செல்வத்தைக் குவிக்கவேண்டும்; மற்றவர்களைவிட முன்னேறவேண்டும்; எந்த நேரத்திலும் வெற்றிபெறும் அளவுக்குப் போட்டியாக இருக்கவேண்டும் என்று உலகம் நமக்குப் பரிந்துரைக்கலாம். இருப்பினும், நம்பிக்கை உள்ள மக்களாக இருக்கும் நம்மிடம் கடவுள் இதை விரும்புவதில்லை என்பதை நாம் உணரவேண்டும். நெருப்பில் புடமிட்டு சோதிக்கப்படும் பொன்னைப் போலக் கடவுள் நம்மை மெதுவாக வடிவமைக்கிறார். அவருக்குப் பிடித்த ஒன்றாக அவர் நம்மை வடிவமைக்கிறார்.

உறுதியற்ற மற்றும் பாதுகாப்பற்ற காலக்கட்டங்களை நாம் கடந்துசெல்லவேண்டும் என்பது முன்னேற்றத்தின் விதி. உலகில் காலமாற்றம் மற்றும் நம்பிக்கையில் வாழும் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நிகழும் உண்மை இது. “உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். நான் உலகின்மீது வெற்றிகொண்டு விட்டேன்” என்று இயேசு கூறுகிறார். ஒரு சிறிய கடுகு விதை வளர்வதற்கு காலம் எடுக்கும்; மிகவும் மெதுவாக, வளர்ச்சி அதிசயமாக நடக்கும். வளர்ச்சியை மிகத் தெளிவாகக் காணமுடியாது. உண்மை என்னவென்றால், நம் வளர்ச்சியைக் கடவுள் மட்டுமே அறிவார். அவரே அளவிடுகிறார். ஒரே நாளில் நாம் புனிதர்களாக மாறிவிடமுடியாது. முழுவாழ்க்கையுமே அதற்குத் தேவை. ஒவ்வொரு கணத்திலும், ஒவ்வொரு நேரத்திலும் ஒவ்வொரு திருப்பத்திலும் காரியங்கள் நடைபெறுவதையும் அதற்கு கடவுளின் மென்மையான கரம் செயல்படுகிறது என்பதிலும் நாம் நம்பிக்கைக் கொள்ளவேண்டும். கடவுள் நம்மை வழிநடத்த அனுமதிப்போம்.

குழந்தைகள் கடவுளின் உடனிருப்பை அனுபவிக்கும் திறன் கொண்டவர்கள். கடவுளின் அன்புக்காக தங்களை முழுவதுமாகத் தர அவர்களால் முடியும்.

– சோபியா காவலெட்டி







**இன்றைய இறைவார்த்தை:**

எசே: 17: 22-24

திபா: 92: 2-3, 13-16

2 கொரி: 5: 6-10

மாற்: 4: 26-34

INTERNAL CIRCULATION ONLY
BUL 24/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org